இதனைப்பற்றி என்ன? ....

# சிறிய வினாவிடை போதினி (கற்றிக்கீஸம்)

## சிறிய வினாவிடை போதினி என்பது என்ன?

மாட்டின் லூத்தரரல் 1529 இலே எழுதப்பெற்ற சிறிய வினாவிடைபோதினியானது ஆறு தலைப்புகளின் கீழ் கேள்வி பதில்களின் தொகுப்பு ஆகும். அவையாவன: பத்துக் கட்டளைகள், அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம், எமது பிதாவே (கர்த்தரின் ஜெபம்), பரிசுத்த ஞானஸ்நானம் எனும் திருவருட்சாதனம், பாவ அறிக்கை, மற்றும் பீடத்தின் திருவருட்சாதனம் ஆகியவைகள். குடும்பத்தினர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தையும் வாழ்வையும் கற்பிக்கும்படியாக வீட்டாரின் தலைவரால் அந்த வினாவிடைபோதினி பயன்படுத்தப்படவேண்டும் என லூத்தர் விரும்பினார்.

சிறிய வினாவிடைபோதினியுடன் அனுதின ஜெபங்கள், கிறிஸ்தவர்களின் பல்வேறு அழைப்புக்களிலே அவர்களது பொறுப்புக்கள் பற்றிய ஒரு அட்டவணை, மற்றும் பரசுத்த திருவிருந்தைப் பெறுவதற்கு ஆயத்தம் செய்கையிலே கிறிஸதவர்கள் பயன்படுத்துவதற்கான ஒரு வழிகாட்டி ஆகியவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. லூத்தரின் சிறிய வினாவிடைபோதினியின் பல பதிப்புக்கள் வினாவிடை பற்றிய விளக்கத்துடனும் வருவதுண்டு. அது வேதாகமத்தில் இருந்து காட்டப்படும் பரந்த மேற்கோள்களுடன் கூட வருகிற கேள்விகளினதும் பதில்களினதும் நீண்டதோர் திரட்சியாகும். இந்த விளக்கங்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டதுடன் அவை லூத்தரின் வாழ்க்கைக் காலத்திலே சேர்க்கப்பட்டது.

## லூத்தர் ஏன் சிறிய வினாவிடை போதினியை எழுதினார்?

அந்தக் கேள்விக்கு லூத்தர் சிறிய கேள்விபதில் தொகுப்பின் முன்னுரையிலே பதில் வழங்குகிறார்:

> "சேகரங்களுக்கு நான் விஜயம் சென்றிருந்தபோது அண்மித்த காலங்களிலே நான் அவதானித்த அவர்களின் இரங்கத்தக்கதும் வெறுக்கத்தக்கதுமான நிலைமைகள், கிறிஸ்தவ சத்தியக்கோட்பாட்டைச் சுருக்கமான, தெளிவான மற்றும் எளிமையான வடிவில் அமைந்ததான இந்தக் கேள்விபதில் தொகுப்பை ஆக்கும்படியாக என்னை நெருக்கி அழுத்தியது. நான் கண்ட கரியங்கள் எவ்வளவு பரிதாபமானது, எனவே தேவனே எனக்கு உதவிசெய்யும்: பொதுவான மனிதன், குறிப்பாக கிராமங்களிலே வாழ்பவன், கிறிஸ்தவ சத்தியக்கோட்பாடு பற்றி தெரிந்துள்ளது சுத்தமாக எதுவுமேயில்லை. அத்துடன் பல மேய்ப்பர்கள் அவர்களுக்குக் கற்பிப்பதற்கு கிட்டத்தட்ட முழுமையாகத் தகுதியற்றவர்களாகவே இருந்தனர். இருந்தும் அந்த மக்கள் கிறிஸ்தவர்களாகக் கருதப்படுபவர்கள், ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள், பரிசுத்த திருவருட்சாதனத்தைப் பெறுகிறவர்கள். அவர்களக்குப் பத்துக்கட்டளைகளோ, எங்கள் பிதாவே ஜெபமோ, விசுவாச அறிக்கையோ தெரியாமல், பன்றிக்கூட்டிலும் களஞ்சியசாலைகளிலும் உள்ள எதுவுமறியாத மிருகங்களைப்போல வாழ்கின்றனர். இந்த மக்கள் கொண்டுள்ள ஆற்றல் எதுவென்றால் சகல கிறிஸ்தவ விடுதலையையும் சுக்குநூறாகக் கிழித்துப்போடும் திறன்கலையே."

கிறிஸ்தவ விசுவாசத்தையும் வாழ்வையும் பற்றிய தெளிவான விளக்கத்தின் தேவையை லூத்தர் எவ்வளவு வலிமையாக உணர்ந்தார் என்பதை நீங்கள் இதனால் அறிந்துகொள்ளலாம்.

பெரிய வினாவிடைபோதினி என அறியப்பெற்ற ஒரு தொகுப்பையுப் லூத்தர் எழுதியிருந்தார். சிறிய வினாவிடைபோதினியைக் கற்றபின்பு பல வயதினர்கள் மிகவும் உதவியாக உள்ள இன்னுமொரு திறமையான வளமாக பெரிய வினாவிடை போதினி திகழ்ந்தது. பெரிய வினாவிடைபோதினியின் பிரதியொன்றை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு உங்களது மேய்ப்பர் உங்களுக்கு உதவிசெய்திடக்கூடும்.

## சிறிய வினாவிடைபோதினியின் நன்மை எது?

சிறிய வினைவிடைத்தொகுப்பானது வேதாகமம், தேவனுடைய வார்த்தை எமக்குக் கற்பிப்பது என்ன என்பதையிட்ட அற்புதமானதோர் சுருக்கந்தான் சிறிய வினாவிடை போதினி. வினாவிடைபோதினியின் வடிவம் கிறிஸ்தவ வாழ்வின் வடிவமாகும்: மனந் திரும்புதல் (பத்துக் கட்டளைகள்), விசுவாசம் (விசுவாச அறிக்கை), ஜெபம் (எமது பிதாவே), பாவங்களின் மன்னிப்பு (ஞானஸ்நானம், பாவ மன்னிப்பு, கர்த்தரின் பந்தி), பின்பு அனுதின ஜெபமும் மற்றும் எமது அனுதின வேலையும். தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களை, சிறிய வினாவிடைபோதினியிலே சுருக்கமாயும் அழகாயும் விளக்கியுள்ளபடியாக அவற்றை மனனம் செய்து கற்றுக்கொள்வது மிக முக்கியமாகும்.

தனது வார்த்தையின் பெறுமதிமிக்க சத்தியங்களைத் தேவன் எம்மை வலிமைப்படுத்தவும், இயேசுக்கிறிஸ்துவில் எமது விசுவாசத்திலே வளர்வதற்கும் பயன்படுத்துகிறார். வினாவிடைபோதினியானது தேவனுடைய பிரமாணத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. அது எமக்கு எமது பாவங்களைக் காட்டி, அவரது ஜனங்களாக நாம் எப்படியாக வாழவேண்டும் என்பதையும் காட்டுகிறது. கேள்விபதிலானது சுவிசேஷத்தை, எமது இரட்சிப்புக்கான இயேசுவின் வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை அழகாகச் சித்திரிக்கிறது.

சிறிய வினாவிடைபோதினியிலே சுருக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையின் சத்தியங்கள் நித்தியவாழ்வினதும் நித்திய மரணத்தினதும் விடயங்கள் என்பதை லூத்தர் உணர்ந்தார். நாம் அறியவேண்டியதான மிகவும் முக்கியமான சத்தியங்கள் அவை. சிறிய வினாவிடைபோதினி தமக்கு இனிமேலும் அவசியமாகத் தேவையில்லை என மக்கள் நினைத்து, தமக்குள், "அது போதும்; இப்போது நான் அதிக முக்கியமான காரியங்களை நோக்கி நகரலாம்" என்று சொல்வார்களேயானால் அது உண்மையிலேயே வருந்தத்தக்க துரதிஷ்டந்தான்."

## சிறிய வினாவிடைபோதினி தனிப்பட்ட கிறிஸ்தவனின் வாழ்விலே எப்படியாகப் பயன்படுத்தப்படலாம்?

பெரிய வினாவிடைபோதினியிலே எழுதும்போது, லூத்தர் நமக்கு நல்ல அலோசனை வழங்குகிறார், "ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் மற்றும் எனக்கு நேரம் கிடைக்கும்போதும் நான் கர்த்தரின் ஜெபம், பத்துக் கட்டளைகள், விசுவாச அறிக்கை, சங்கிதங்கள் ஆகியவற்றை வார்த்தைக்கு வார்த்தை வாசித்துக் கூறுவேன். நான் இன்னமுந்தான் வினாவிடைபோதினியை நாளாந்தம் வாசித்து அதனைக் கற்றுக்கொள்ளவேண்டும், இருந்தும் நான் விரும்புவதுபோல அதனை நான் கற்றுதேற முடியாது என்பதால் நான் வினாவிடைபோதினியின் பிள்ளையாகவும் மாணவனாகவும் தொடர்ந்தும் இருப்பேன், அதனை நான் மனமகிழ்வுடன் செய்வேன்." சிறிய வினைவிடையானது தனிநபர்களுக்கும் குடும்பங்களுக்குமான ஜெபநூலாக இருக்கும்படியே நோக்கம் கொள்ளப்பட்டது. வினாவிடைபோதினியின் பல பகுதிகளிலே நாம் தியானிக்கும்போது, நாம் தேவனிடமிருந்து அறிவுறுத்தல்கள் பெறுவதற்காக அவரைப் பார்க்கிறோம், பின்பு தேவனுக்கு எதற்காக நாம் நன்றி கூறலாம் என்று பார்க்கிறோம், பின்பு தேவனிடம் நாம் எவற்றை அறிக்கையிடவேண்டும் என்பதைப் பார்ப்போம், இறுதியாக நாம் தேவனுடைய வார்த்தையின்படி நாம் வாழும்படியிக அவரது ஆசீர்வாதத்தையும் இரக்கத்தையும் தேவனிடம் வேண்டிக்கேட்டு, எமது ஜெபம்நிறைந்த தியானத்தை முடித்துவைப்போம். இப்படியாக

# சிறிய வினாவிடை போதினி (கற்றிக்கீஸம்) பற்றி என்ன?

நாம் அனுதினமும் வினாவிடை போதினியைப் பயன்படுத்தும் விதம் கிறிஸ்தவ வாழ்வுக்கான வல்லமைமிக்கதான ஒரு கருவியாகும்.

## சிறிய வினாவிடைபோதினி வீட்டிலே எப்படியாகப் பயன்படுத்தப்படலாம்?

சிறிய வினாவிடைபோதினியானது குடும்பத்தின் கிறிஸ்தவக் கைநூலாக இருக்கும்படிக்கே வடிவமைக்கப்பட்டது. உண்மையிலேயே, இந்த சிறிய வினாவிடைபோதினியைச் சிலர் "பொதுநிலையினரின் வேதாகமம்" என்று குறிப்பிடுவதுண்டு, ஏனெனில், கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமானவைகளைப் பற்றி சிறப்புவாய்ந்த சுருக்கமும் தெளிவுமான தொகுப்பை அது வழங்குகிறது.

குடும்பங்கள் வினாவிடைபோதினியைத் தமது அனுதினத் தியானத்திலே பயன்படுத்தலாம். ஆகாரத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் குடும்பமாகச் சொல்லும் ஜெபங்கள், ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களும் படுக்கைக்குச் செல்லும்போதும் துயில் எழும்போதும் சொல்லக்கூடிய ஜெபங்கள் போன்றவற்றை லூத்தர் வழங்கியிருக்கிறார்.

வினாவிடைபோதினியைப் பயன்படுத்தும் குடும்பங்கள் கர்த்தரின் ஜெபத்தை ஒன்றாக ஜெபிப்பதும் பின்னர் அப்போஸ்தலர் விசுவாக அறிக்கையை ஒன்றாகக் கூறுவதும் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டுகொள்வார்கள். பின்பு அவர்கள் பத்துக்கட்டளைகள், விசுவாச அறிக்கை, கர்த்தரின் ஜெபம், பரிசுத்த ஞானஸ்நானம், பாவ அறிக்கை, மற்றும் பரிசுத்த திருவிருந்து ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களைத் தொடர்வார்கள், படிப்படியாக, மாதங்கள் வருடங்கள் கடந்தோட, முழுக்குடும்பமுமே வினாவிடைபோதினியை தமது ஞாபகத்தில் இருந்து ஒப்புவித்து, அவற்றின் அர்த்தத்தை ஒன்றாகக் கலந்துரையாடுவது இயலுமானதாக இருக்கும்.

## வினாவிடைபோதினியானது அவையினர்களுக்கு எப்படியாகப் பயன்படுத்தப்படலாம்?

வினாவிடை போதினியானது சிறுவர்கள் வயதினர்கள் ஆகிய இருதரப்பினர்களுக்கும் உறுதிப்படுத்தும் அறிவுறுத்தலிலே பிரதான வளமாக உள்ளது. வினாவிடைபோதினி வேறு பல வழிகளிலுங்கூடப் பயன்படுத்தப்படலாம். வேதாகம வகுப்புகளுக்கும் சபையிலே கூடும் இதர குழக்களுக்கும் அது ஒரு முக்கியமான வளமாகும். லூத்தரன் அவையிலே கிரமமாகக் கூடிவரும் ஒவ்வொரு குழுவுமே தமது கூட்டங்களை வினாவிடை போதினியின் ஒரு பகுதியை மீளாய்வு செய்து, பின்னர் அதனை ஜெபத்துடன் முடித்துவைப்பது நலமாக இருக்கும் அல்லவா?

பல அவைகள் வினாவிடை போதினியின் பாகமொன்றைப் பதிப்பிப்பதையும், ஞாயிறு ஆராதனையின்போது அதனை ஒப்புவிப்பதையும் வழமையாக்கிக் கொண்டுள்ளன. வேறு அவைகள் அத்வெந்து மற்றும் லெந்து காலத்தின் மத்திய வார ஆராதனைகளின்போது வினாவிடை போதினியின் பிரதானமான ஆறு பகுதிகளைக் கவனமாக மீளாய்வு செய்வதற்காக அர்ப்பணிப்பதுமுண்டு. இன்னும் சில அவைகள் சபை வருடத்தின் கொண்டாட்டம் எதுவுமில்லாத அரை வருடத்தை, வினாவிடை போதினியை மீளாய்வு செய்வதிலே தமது விசேஷ கவனத்தைச் செலுத்த ஒதுக்கி நேரம் செலவிடுவதுண்டு. ஒரு சில மேய்ப்பர்கள் வினாவிடை போதினியை ஆராதனைகளின்போது சிறுவர்களுக்கான பிரசங்கத் தலைப்புகளாகப் பயன்படுத்துவதுண்டு. நிச்சயமாகவே அது திறமானதோர் வழமையாகும்.

வேறு அவைகள் தமது வயதினர் வேதாகமப் பாடங்களின்போதும் இதர படிப்புக்குழுக்களிலும் வினாவிடை போதினியையும் அதன் விளக்கங்களையும் பாவித்தால் செழிப்பாக ஆசீர்வதிக்கப்படுவதும் உண்டு. வினாவிடை போதினியினூடாகக் கவனமாகக் கற்கும்போது அதிக கலந்துரையாடல்களும் கற்கையும் இடம்பெறுவதாகச் சில பாடக்குழுக்கள் கண்டுகொண்டுள்ளன.

பல மக்கள் இயேசுக்கிறிஸ்துவைப் பற்றியும் எமக்கு அவர் எப்படி அர்த்தமுள்ளவராகிறார் என்பதைப் பற்றியும் சாட்சியிடுவதற்கும் வினாவிடை போதினியானது உதவியான வளமாக இருந்துள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர். விசுவாச அறிக்கைக்கான விளக்கத்தைத் திருப்பக்கூற இயலுமாய் இருப்பது இயேசு என்பவர் யார் என்பதைப் பற்றியும் எப்படியாக ஒருவர் கிறிஸ்துவிலே இரட்சிப்பைப் பெறலாம் என்பதைப் பற்றியும் பிறருக்குச் சொல்வதற்கு நல்லதோர் வழிமுறையாகும்.

## வினாவிடை போதினியை நன்கு மனனம் செய்வதில் உள்ள நன்மை என்ன?

நிறையவே நன்மைகள் உண்டு! வினாவிடை போதினியானது கிரமமாக திரும்பத்திரும்ப வாசிப்பதாலும், கலந்துரையாடுவதாலும், ஜெபிப்பதாலும் கற்றுக்கொள்ளப்படுகிறது. வீட்டின் தலைவர் ஏனைய குடும்பத்தினர்களை வினாவிடை போதினியின் பல பகுதிகளைப் பேசுவதற்கு வழிநடாத்தி, அதன்மூலம் ஆறுதலாக ஆனாலும் நிச்சயமாக வினாவிடை போதினியைப் பாடமாக்கலாம். உதாரணமாக, ஒருகிழமைக்கு குடும்பம் முதலாவது கற்பனை, அதன் கருத்து அல்லது விசுவாசப் பிரமாணத்தின் முதலாவது ஷரத்தும் அதன் அர்த்தமும் போன்றவைகளிலே கவனம் செலுத்தலாம்.

வினாவிடை போதினியைப் பாடமாகக் கற்றுக்கொள்வது வினாவிடை போதினியக் கற்பிப்பதற்கு மிகமுக்கியமானதாகும். ஒருவேளை ஆரம்பத்திலே ஒவ்வொரு வார்த்தையுமே அர்த்தம்பெறுவது இயலாதுபோகலாம். அது ஒரு பிரச்சினையல்ல. அவற்றைத் தொடர்ந்தும் கற்பதற்கு எத்தனித்தால், காலப்போக்கிலே புரிந்தறிவு ஏற்படும். ஆனால் வார்த்தைகளைக் கற்பது நேரடியாகவே ஆரம்பிக்கப்படவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்தறியுமட்டுக்கும் வினாவிடை போதினியைப் பாடமாக்குவதைத் தாமதப்படுத்துவதிலே நாம் மோசமானதோர் தவறை இழைக்கிறவர்களாவோம். நாம் எமது விசுவாசத்தின் மொழியை முதலிலே பேசக்கற்றுக்கொள்ளவேண்டும், அதனைப் புரிந்துகொள்வதற்கு முன்பதாக. பிள்ளைகள் எவ்வளவு துரிதமாக வினாவிடை போதினியின் வார்த்தைகளை மனனம் செய்யக்கூடுமாய் இருக்கிறது என்பதைப் பற்றியும் பின்னர் அவர்கள் அதனைப் புரிந்துகொள்வதைப் பற்றியும் குடும்பங்கள் ஆச்சரியப்படக்கூடும்.

மாட்டின் லூத்தர் இது செய்யப்படவேண்டும் என்பதையிட்டு மிகவும் கரிசினை கொண்டிருந்தார். சிறிய வினாவிடை போதினிக்கான முன்னுரையிலே அவர் எழுதினார், "எனவே உங்களுக்கு விருப்பமான வடிவத்தைக் கைக்கொண்டு அதிலே எப்போதுமே ஒட்டிப்பிடித்திடுங்கள் ... தனித்த நிலைத்த நிரந்தரமான வடிவம் மற்றும் வார்த்தையிடலைக் கைக்கொண்டு, அவர்களுக்கு முதலிலே பத்துக் கட்டளைகளையும், விசுவாசப் பிரமாணத்தையும், கர்த்தரின் ஜெபம் போன்றவைகளையும் அந்தந்தப் பகுதியிலே உள்ளபடியாகவே வார்த்தைக்கு வார்த்தை கற்பியுங்கள். அதன்மூலம் அவர்கள் நீங்கள் சொல்வதை மீளச்சொல்லி, அதனைப் பாடமாக்கிக்கொள்வார்கள்."

## சிறிய வினாவிடை போதினியின் பிரதிகளை நாம் எங்கே பெற்றுக்கொள்ளலாம்?

நீங்கள் வினாவிடை போதினியின் பிரதிகளை கொங்கோடியா பதிப்பதகத்திலே Concordia Publishing House, அவர்களது இலவச தொலைபேசி இணைப்பு இலக்கமான 800–325–3040 இற்கு அழைத்து வாங்கலாம்.

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை